நாள்: 09.04.2026

OP 50/2023 Joint trail with OP 232/2024

பெயர் ஜெயசந்திரன்

எ. ம.சா.2

**குறுக்கு விசாரணை**

என் மகள் மீது என் மருமகன் விவாகரத்து கோரி வழக்கு தாக்கல்செய்துள்ளார். என் மகள் விவாகரத்து வழக்கில் ஆஜராகிவிட்டு, அதற்கு பின்னர் தேனி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடம் என் மருமகன் மீது புகார் கொடுத்தார் என்றால் சரிதான். சேர்ந்து வாழ வேண்டும் என்று புகார் கொடுத்தார். புகாரை என் மகள் அவரது மாமியார், மாமனார் பெயரில் மட்டும் தான் கொடுத்துள்ளார். நாங்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் உத்தமபாளையம் மகளிர் காவல் நிலையத்தில் விசாரணை 20.05.2023 நடைபெற்றது என்றும், காவல் நிலைய விசாரணையில் பி.வா.சா.ஆ.1 ல் தாலி செயினை திரும்ப கொடுப்பதாக பேசி முடித்து நான் அதில் சாட்சி கையழுத்து போட்டுவிட்டு, தற்போது அந்த ஆவண சரத்துகளுக்கு முரண்பாடாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1ல் மற்றொரு சாட்சியாக என் மனைவி மாலதி சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்.

என்னுடைய முதல்விசாணை வாக்குமூலத்தில் என் மருமகன் மருத்துவ பரிசோதனைக்கு என் மகளுடன் சேர்ந்து வரவில்லை என நான் சொல்லியுள்ள சங்கதிகள் தவறானது என்றும், என் மருமகன் நல்ல உடல் தகுதியில் இருக்கிறார் என்பது குறித்து மருத்துவ சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. 2022 தீபாவளி முதல் என் மகளும், என் மருமகனும் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள். தீபாவளிக்கு விருந்துக்கு வந்தவர் 1 வாரம் கழித்து அழைத்து செல்ல வருவதாக கூறினார். ஆனால் திருப்பி வரவில்லை. என் மகளும், என் மருமகனும் சேர்ந்து வாழ்ந்த காலகட்டத்தில் என் மகள் அதிக ஆடம்பர செலவு செய்து அடிக்கடி அதனால் பிரச்சனை ஏற்பட்டு பலமுறை குடியிருக்கும் வீட்டை மாற்றினார்கள் என்றால் அப்படி ஒரு சம்பவம் நடைபெறவில்லை.

08.02.2023 ல் என் மருமகன் வீட்டிற்கு நான் சென்று வீடு புகுந்து சொத்தை எழுதி தரக்கோரி அடித்ததாக என் மீது குமுளி காவல்நிலையத்தில் புகார் கொடுத்து, புகார் மனு ரசீது கொடுக்கப்பட்டது என்றால் அது பொய் புகார் ஆகும். பி.சா.ஆ.2 புகைப்படத்தில் கண்ட நபருடன் என் மருமகன் 2 வது திருமணம் செய்து கொண்டார் என்றால் அதை பற்றி நேரடியாக தெரியாது. அந்த 2 வது திருமணத்தில் கலந்து கொண்ட பால்பாண்டியன் சொல்லி தெரியும். புகைப்படத்தை உருவாக்கி போலியான புகைப்படங்களை தயார் செய்யலாம் என்றால் குறைவான சாத்தியக்கூறுகள் உள்ளது. பி.சா.ஆ.2 புகைப்படத்தை யார் எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. புகைப்படம் செல்போன் மூலம் எடுக்கப்பட்டதா கேமிரா மூலம் எடுக்கப்பட்டதா என்ற விவரம் எனக்கு தெரியாது. என் மருமகன், உமாசங்கரி என்ற நபரை 2 வது திருமணம் செய்த விவரம் 2 மாதத்திற்கு முன்பு தான் தெரியும். அந்த 2 வது திருமணம் தெரிந்தவுடன் கடந்த 13.03.2026 ல் தேனி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் நான் புகார் கொடுத்தேன். போலீசார் விசாரிப்பதாக சொல்லியுள்ளார்கள். நான் சொல்வது போல் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

பி.வா.ஆ.2 புகைப்படங்களை 2ம் நிலை சாட்சியங்களாக எடுத்துக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல. என் மகளுக்கு சேர்ந்து வாழும் எண்ணம் இல்லை என்றும், என் மருமகனிடம் அதிக லாபம் அடையலாம் என்ற எண்ணத்தில் சேர்ந்து வாழ வேண்டும் என்ற மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. சேர்ந்து வாழ

வேண்டும் என்ற எண்ணன் இருந்தால் அந்த மனுவை விவாகரத்து மனு தாக்கல் செய்வதற்கு முன்னரே தாக்கல் செய்திருப்போம் என்றும், விவாகரத்து மனு நடவடிக்கையை இழுத்து அடிப்பதற்காக எவ்வித காரணமும் இல்லாமல் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து பேசி முடித்து விவாகரத்து கொடுப்பதாக சொல்லிவிட்டு தற்சமயம் அதிக லாபம் அடைய இந்த வழக்கை நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.04.09 18:36:25 +0530

சார்பு நீதிபதி

உத்தமபாளையம்